*ஹரோ தமிழ் பாடசாலை பேச்சுப் போட்டி 2026*
*ஆண்டு - 8 (Year 8)*

*1/09/2013 - 31/08/2014 பிறந்தவர்கள்*

*(ஹரோ தமிழ்ப் பாடசாலையின் தமிழ் வகுப்பு மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்)*

*போட்டி நடைபெறும் திகதி 21/11/2026*

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது*

## சிலப்பதிகாரம்

*உலகத்தில் பேசப்படுகின்ற பலநூற்றுக் கணக்கான மொழிகளில் நம் தாய்மொழியாம் தமிழ்மொழி பல ஆயிரம் ஆண்டுகள் பழமையும் உயரிய பண்பாட்டு நாகரீகத்தின் ஊற்றாகவும் விளங்குகின்றது என்றால் மிகையன்று. தொல்காப்பியம் முதலாக பல் வேறு இலக்கிய இலக்கண நூல்கள் தமிழின் தொன்மையையும் தமிழர் தம் பண்பாட்டு வாழ்வியலையும் பறைசாற்றி நிற்கின்றன.*

*அந்த வகையில் தமிழில் தோன்றிய முதற் காப்பியமான சிலப்பதிகாரம் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது. சேரர் குல இளவலான இளங்கோ சமண சமயத்துறவியாகி இளங்கோ அடிகள் என வாழும் காலத்து தமிழுக்குத் தந்திட்ட ஒப்பற்ற காவியம் சிலப்பதிகாரம்.*

*முற்காப்பியம், முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று போற்றப்படும் சிலப்பதிகாரம், கண்ணகி என்னும் ஒரு பெண்ணைக் கதையின் நாயகியாகக் கொண்டு தமிழர் தம் மண்ணில் பெண்மையைப் போற்றும் உயரிய பண்பைப் பறைசாற்றி நிற்கின்றது.*

*சோழவள நாட்டிற் தொடங்கி சேர நாட்டில் முடிவடையும் காதையில், சேர சோழ பாண்டிய மண்டலங்களின் இயற்கை வளம், நகரங்களின் சிறப்பு, மக்களின் வாழ்வியல் முறைமை, அவர்தம் பண்பாடு, கலைவளம், வாணிப மேலாண்மை, அறம் போற்றுதல் போன்ற இன்னோரன்ன விடயங்களை வெளிப்படுத்துகிறது சிலப்பதிகாரம்.*

*தமிழில் தோன்றிய முதற் காப்பியம் என்றாலும் கடவுளரையோ, மன்னர்களையோ கதையின் முதற் பாத்திரங்களாக கொள்ளவில்லை, மாறாக சாதாரண குடிமக்களின் கதைகளைப் பேசி உயர்வு பெறுவது மட்டுமல்லாமல், பழந்தமிழர் தம் பண்பாட்டு வரலாற்றைக் கற்றறிந்து போற்றுவதற்கேற்ற வரலாற்றுச் சான்றாகவும் விளங்குகின்றது சிலப்பதிகாரம்.*

*எனவே நாமும் சிலம்பைக் கற்போம், பழந்தமிழர் வாழ்வியலைத் தெரிந்துகொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்.*